IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# BHARATHI WAS A PROPHET

பாரதி ஒரு தீர்க்கதரிசி

Dr.S.Kannadasan

Associate Professor

DRBCCC Hindu College, Pattabiram,

Chennai, Tamilnadu, India.

Abstract

Bharathi, who emerged during the Indian freedom struggle, inspired the revival of Tamil literature by keeping the desire for liberation alive in his songs. He expressed his prophetic ideas of what the future India would be and should be through his works.

What he sang as dreams have come true today. Among them are national unity, liberation, society, education, science, agriculture, linguistics etc. What he sang as dreams have come true today. Among them are national unity, liberation, society, education, science, agriculture, linguistics etc.

Key words

Indian freedom struggle, prophetic ideas, national unity, liberation, society, education, science, agriculture, linguistics etc.

**முன்னுரை**

**"தமிழகம் தமிழுக்குத் தகுமுயர் வளிக்கும்**

**தலைவனை எண்ணி தவங்கிடக்கையில்**

**இலகு பாரதிப் புலவன் தோன்றினான்"**

எனப் பாவேந்தர், தீர்க்கதரிசியாக அவதாரம் எடுத்த பாரதியின் வருகையைப் போற்றியுரைப்பார். இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் தோற்றம் கண்ட பாரதி, விடுதலை வேட்கையைத் தம் எழுத்துகளின் உயிர்நாதமாகக்கொண்டு, தமிழிலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். எதிர்கால இந்தியா எப்படி இருக்குமென்றும் இருக்கவேண்டுமென்றும் தமது தீர்க்கதரிசன சிந்தனைகளைப் படைப்புகளின் மூலம் வெளிப்படுத்தியவர். அன்று கனவுகளாக எண்ணிப் பாடிய அத்துனையும் இன்று நிறைவேறியிருக்கின்றன. அவற்றுள் தேசிய ஒருமைப்பாடு, விடுதலை, சமூகம், கல்வி, அறிவியல், வேளாண்மை, மொழியுணர்வு என அவர் நிகழ்காலத்தில் கூறிய எதிர்காலச் சிந்தனைகளைக் (தீர்க்கதரிசனம்) காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**தீர்க்கதரிசனம்**

தீர்க்கதரிசி என்பதை "எதிர்காலத்தில் நடக்கப் போவதை முன்னரே உணர்ந்து சொல்லக்கூடிய திறனுடையவர்" என்பது பொருளாகும்.(க்ரியா தற்காலத் தமிழகராதி ப.735).

பாரதியார் இறந்தகால நிகழ்காலச் செயல்களைக் கூறிச் செல்வதோடு அன்றி எத்தனையோ எதிர்காலச் செயல்களை முன்கூட்டியே அறிந்து; பல்லாண்டுகட்கு முன்னமே கூறியிருப்பது பெருவியப்பை அளிப்பதாக உள்ளது. செயல்களைக் காட்டிலும் சொற்களுக்கு வலிமையுண்டு. பாரதியின் நாவன்மையான தீர்க்கதரிசன சொற்கள் வலிமையுள்ளனவாய் அவரது படைப்புகள் வழி வெளிப்பட்டுள்ளன. அவரது எதிர்காலச் சிந்தனை எத்தகையது என்பதை மண்டையம் ஸ்ரீனிவாஸாரியார், "அவர் (பாரதி) நல்ல கவி மாத்திரமல்ல மனிதனின் மேன்மையான வருங்காலத்தை அறிந்திருந்த ஞானியும் கூட, அதனால் அவர் வெறும் தமிழ்க்கவியல்ல உலகமகாகவி. இந்தியாவின் தற்கால நிலைமையைக் கணித்து இத்தகைய கையாலாகாத் தனத்தையும் மூடநம்பிக்கைகளையும் தவிர்த்துப் புதியபாதையில் புதிய வாழ்வு காணும்படி இந்தியரைத் தட்டி எழுப்பிய சிலருள் முதன்மையானவர்."(இந்திய இலக்கியச் சிற்பிகள், ப.93) என்கின்றார். இத்தகைய எதிர்காலச் சிந்தனைகளைப் பாரதியின் படைப்புகளில் புலப்படுகின்றன.

**தேசியம்**

விடுதலைப் பெறும் முன்னமே பெற்றுவிட்டோமென்று எதிர்கால நிகழ்வினை நிகழ்காலத்தில் கூறிய தீர்க்கதரிசன சொற்கள் மெய்மையானது. இந்தியதேசம் அந்நியரிடமிருந்து விடுதலைப் பெறுவது உறுதி என்பதை,

**"ஆடுவோமே பள்ளு பாடுவோமே**

**ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமே"**

என பெறும் முன்னே பெற்று விட்டோமென்று வீர முழக்கமிட்டார்.

சுதந்திரம் பெற்று எழுபத்தைந்து ஆண்டுகளில் இந்தியா பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுள்ளது. ஆசியக் கண்டத்தில் பலம் பொருந்திய நாடாகத் திகழ்கிறது. பாரததேசம் என்ற சொல்லை எதிர்காலத்தில் காதால் கேட்கும் பிற தேசத்தார் அச்சம் கொள்வரென்பதை,

**"பாரத தேசமென்று பெயர்சொல்லுவார் – மிடிப்**

**பயங் கொள்ளு வார் துயர் பகை வெள்ளுவார்"**

எனப் பாரதி தமது பாடலில் என்றோ புலப்படுத்தினார். அண்மையில், இந்தியாவின் வளர்ச்சியைக் கண்டு மிரண்டுபோன முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரப், "இந்தியா வளரும் நாடு அல்ல வளர்ந்த நாடு" என்று குறிப்பிட்டுள்ளார். இவரது கூற்றை நோக்குகையில் எங்கே இந்தியா பொருளாதாரத்தில் அமெரிக்காவையே விஞ்சிவிடுமோ என்ற அச்ச உணர்வை அவரது கூற்றால் உணர முடிகின்றது. அமெரிக்கா மட்டுமல்ல ஆசியக்கண்ட நாடுகளும் ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவைக் கண்டு அஞ்சும் அளவிற்கு பாரததேசம் உயர்வு பெற்றிருக்கின்றது.

உலக நாடுகளில் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளுள் ஒன்றான இந்தியாவில் மொழிகளாலும் மதங்களாலும் வேறுபட்டிருப்பினும் வேற்றுமையில் ஒற்றுமைக் காண்பதே இந்தியநாட்டின் பண்பாடாகும். இதையே அன்று பாரதி,

**"வெள்ளிப் பனிமலையின் மீது உலாவுவோம்-அடி**

**மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்**

**பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்**

**எங்கள் பாரததேசமென்று தோள் கொட்டுவோம்**

என்று வெற்றி முரசு கொட்டினான் என எண்ணத்தோன்றுகிறது.

**சமூகம்**

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்ட பாரதி, ஆரம்ப காலங்களில் தமது பாடல்களில் விடுதலை வேட்கைக் கனலை வெளிப்படுத்தினார். நாட்டு விடுதலைப் பற்றிப் பேசிய பலர் தனது வீட்டுப் பெண்களுக்கு விடுதலைத்தரும் எண்ணம் இல்லாதவர்களாக இருந்தனர். இதனைக் கண்ணுற்ற பாரதி தேச விடுதலைக்காகப் போராடும் எண்ணத்தைக் கைவிட்டார். ஏனெனில் பாரதியின் எண்ணம் "சமூகம் விடுதலைப் பெற்றால் நாடு தானாகவே விடுதலை பெறும்" என்னும் கோட்பாடுடையவராகச் சமூக முன்னேற்றம் சார்ந்த பாடல்களைத் தமது பாடலின் பொருண்மையாக்கினார். பெண் சமூகம் விடுதலைப் பெற வேண்டுமென்ற விருப்புற்ற பாரதியின் குரல்,

**"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென**

**எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்**

**வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்பேமென்ற**

**விந்தை மனிதர் தலைக் கவிழ்ந்தார்".**

எனக் கும்மிப்பாடல் வடிவிலே முழங்கியது. பெண்களை அடிமைத் தனத்தில் வைத்திருந்த விந்தை மனிதர்களை இன்று பார்ப்பது அரிது. ஏனென்றால் தீமையென எண்ணியவர்களே இன்று பெண் சமூகம் ஏற்றம் காண எல்லா வகையிலும் உறுதுணையாக இருந்து வருகின்றனர் என்று பாரதி கூறிய கூற்று தற்காலத்தில் நிருபனமாகியுள்ளது.

மனிதருள் ஒரு பகுதியினர் செல்வச் செழிப்பில் மகிழ்வதும், ஒரு சாரார் பட்டினியில் வாடுவதுமான இருதரப்பு மக்களைப் பார்க்கிறோம். இருவருக்கும் சம்பந்தம் இல்லை. பட்டினியால் வாடுவோருக்கு உணவளிக்க வேண்டும். தனியொருவனுக்கு உணவு கிடைக்காவிடின் இந்த உலகம் இருத்தலால் பயனில்லை. அத்தகைய ஜகம் இருப்பதைக் காட்டிலும் அழிவது மேலானது என்பது பாரதியின் எண்ணமாகும். இதையே,

**"வயிற்றுக்குச் சோறொடல் வேண்டும்- இங்கு**

**வாழும் மனிதர் கெல்லாம்"**

**"தனியொருவனுக்கு உணவில்லையெனில் – இந்த**

**ஜகத்தினை அழித்திடுவோம்.**

என்றெல்லாம் புரட்சிக் குரல் எழுப்பியுள்ளார். ஏழை, எளியோர் பசியின்றி வாடி விடக் கூடாது என்பதற்காக அரசாங்கமும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் பரவலாக அனைத்து இடங்களிலும் அட்டிற்சாலைகளை மலிவு விலைக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இவை போன்ற நிகழ்வுகள் பின்பு நிகழும் என்பதை முன்கூட்டியே கூறியமை பாரதியின் தீர்க்கதரிசன சிந்தனையை வெளிக்காட்டுகிறது.

**கல்வி**

மெக்காலே கல்வி முறைக்கு முன்னர் நாட்டில் திண்ணைக் கல்வி (குருகுலக் கல்வி) முறை நடைமுறையில் இருந்து வந்தது.

**"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" (தொல்.பொருள்,அகம்-28)**

என்பதற்கேற்ப கல்வி கற்கும் தகுதி உயர்ந்த சாதியினர்க்கே உரியதாய் இருந்தது. அதனை அனைவரும் கற்க வேண்டுமென்று பாரதி விரும்பினார். இந்தியா வளமிக்க தேசமாக மிளிர வேண்டுமெனில் தேசவிடுதலை, தொழில் வளர்ச்சி ஆகியன மட்டுமின்றி கல்வி வளர்ச்சியும் இன்றியமையாதன எனக் கருதினார். தமிழிலக்கிய வரலாற்றில் சான்றோர் பெருமக்களான வள்ளுவர், ஔவையார் என எத்தனையோ இலக்கிய வித்தகர்கள் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினர். மட்டுமின்றி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அண்ணல் அம்பேத்கர் தன் வாழ்நாள் இறுதிவரையிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்வி முழுமையாக கிடைக்க வேண்டுமென்று போராடி; அதில் வெற்றியும்கண்ட அவரின் அளப்பரியப் பணியினை யவரும் மறந்துவிட முடியாது. அவ்வரிசையில் பாரதியும் கல்வியின் பயனை மிக ஆழமாகவும் விரிவாகவும் விளக்கியுள்ளதை,

**"அன்ன சத்திரம் ஆயிரம் கட்டல்**

**ஆலயம் பதினா யிரம் நாட்டல்**

**அன்னவை யாயினும் புண்ணியங்கோடி**

**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"**

எனும் பாடல் குறிப்பிடுகிறது.

இவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என்பது பாரதியின் எண்ணம். இன்று அரசாங்கமும் அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்குக் காலைச்சிற்றுண்டி, மதியஉணவு, பன்னிரண்டாம் வகுப்புவரை அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிப் படிப்பினைப் பயிலும் மாணவியர்களுக்குப்

புதுமைப்பெண் திட்டம், கல்லூரி மாணவர்களுக்கான நான்முதல்வன் திட்டம் போன்ற பிற சலுகைகளையும் வழங்கி, கற்றல் கற்பித்தலில் ஏற்படும் தேக்கநிலையை குறைத்து வருகிறது. பிற கல்வி நிலையங்களும் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடசாலைகளை அமைத்துக் கொடுத்துள்ளன. அண்மையில் மருத்துவ நுழைவுத்தேர்விற்கும் (NEET), இந்தியக் குடிமையியல் பணிக்கான தேர்விற்கும் (IAS/IPS/IFS/IRS), தமிழக அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கும் (TNPSC) அரசு இலவசமாக பயிற்சியளிப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அரசோடு இணைந்து சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் இலவசமாகப் பயிற்சி அளித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாகச் சென்னை அசோக்நகர் அம்பேத்கர் திடலில் கடந்த சில ஆண்டுகளாக எழிச்சித் தமிழர் திருமாவளவன் அவர்களால் நடத்தப்பெற்றுவரும் 'திருமா பயிலகத்தில்' இலவசமாக பயிற்சிப் பெற்ற இளைஞர் பலர் அரசுப் பணி வகித்துவருவது இவண் எண்ணத்தக்கது. இவைபோன்ற செயல்பாடுகள்தான் அன்று பாரதி கண்ட கனவுகள் இன்று நிறைவேறியிருப்பது அன்று பாரதியின் தீர்க்கதரிசனக் கூற்றினை நினைவு படுத்துவதாக உள்ளது.

**அறிவியல்**

கடந்த அறுபது ஆண்டுகளில் அறிவியல் துறையில் வியத்தகு முன்னேற்றங்கள், புதியக் கண்டுபிடிப்புகள் வியக்கத்தக்கவை. பாரதி அப்பொழுதே அசைக்கமுடியாத தன்னம்பிக்கையுடன் இருந்ததை,

**“நடையும் பிறப்புமுணர் வண்டிகள் செய்வோம்**

**ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்”**

**“மந்திரம் கற்போம் வினைத் தந்திரம் கற்போம்**

**வானை யளப்போம் கடல் மீனையளப்போம்**

**சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்**

**சந்தி தெருபெருக்கும் சாத்திரம் கற்போம்”**

எனத் தீர்க்கதரிசனமாகக் கூறிய திறம் பாராட்டுதலுக்குரியது. குறிப்பாக மனிதன் சந்திரனில் காலடி வைக்க முடியும் என நம்பக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படாத காலத்திலேயே சந்திர மண்டலத்தைப் பாடியுள்ளார்.

இந்தியா விடுதலையடைந்த பின்பு விண்வெளித்துறையில் பிற உலகநாடுகளைப் போல வளர்ச்சியடைய வேண்டுமெனும் நோக்குடன் 15 ஆகஸ்ட் 1969 இல் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக்கழகம் (ISRO- Indian Space Research Organisation) ஏற்படுத்தப்பட்டது.

ஏவுகனைகளை ஏவுவதற்காக ஆந்திரபிரதேசத்தில் ஸ்ரீஹரிகோட்டா, கேரளத்தில் தும்பா போன்ற ஏவுதளங்கள் ஏற்படுத்தப்பட்டு ஆரியப்பட்டா(1975), பாஸ்கரா, ரோகிணி1,2(1980,), மங்கல்யான், சந்திராயன் -1(2008), சந்திராயன் -2 (2019), சந்திராயன் -3, ஆதித்யா போன்ற விண்கலங்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன. இந்தியா விண்வெளித்துறையில் சாதனைப் படைப்பதைக் கண்டு உலக நாடுகள் வியந்து பாராட்டி வருகின்றன. வருங்காலத்தில் சூரியன், செவ்வாய் கோள்களை ஆய்வு செய்வதற்கு ககன்யான், மங்கல்யான் -2 திட்டமிடப்பட்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இந்தியாவின் அண்மைக்கால விண்வெளி ஆராய்ச்சியின் வெற்றிப்படியாக, 2023 சூலை14 அன்று சந்திராயன் -3 விக்ரம் லேண்டரும், பிரக்ஞான் ரோவரும் நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கின. உலகநாடுகளின் பார்வை இந்தியாவின்மீது விழுந்தது. இதன் மூலம் நிலவில் லேண்டரை தரையிறக்கிய நான்காவது நாடு என்ற பெருமையையும் பெற்றது.

இதனைத் தொடர்ந்து ஆதித்யா எல்-1 என்ற விண்கலம் பூமியிலிருந்து 15கோடி கிலோமீட்டர் தொலைவிலுள்ள சூரியனை ஆய்வு செய்வதற்காக 2023 செப்டம்பர் மாதம் இரண்டாம்நாள் சூரியனுக்குப் பயணம் மேற்கொண்டது. பூமியில் இருந்து 15 லட்சம் கி.மீ. தூரம், 125 நாட்கள் பயணித்து, ஜனவரி 6 , 2024 அன்று சூரியனுக்கு அருகில் உள்ள, எல் -1 எனப்படும், லாக்ராஞ்சியன் புள்ளியில் நிலை நிறுத்த முடிவு செய்யப்பட்டது. இச்சாதனைகளைத்தான் அன்றே பாரதி, “சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்” எனக் கணித்துக் கூறினார் என்று நினைக்கையில், அவர் ஒரு தீர்க்கதரிசி என்பது வெள்ளிடைமலையாகும்.

**முடிவுரை**

- ❖ தேசியம், சமூகம், கல்வி, அறிவியல் குறித்த பாரதியின் தீர்கதரிசனக் கருத்துகள் பலவும் இன்று நிறைவேறியுள்ளன.
- ❖ சாதி, மதம், இனம் மொழி, என இவற்றையெல்லாம் கடந்த ஒரு பொதுவுடைவாதியாக, தனது வாழ்நாள் முழுவதும் வாழ்ந்துகாட்டிய பாரதியை ஒரு தீர்க்கதரிசி எனில் மிகையன்று.

Reference


1. Ganesan, s.n. 1988, Brathiyar marumalarchi kavinjar, Tamil ilakkiyathurai, University of madras.
2. Kriyaa tharkaala thamizakaraathi, 2014
3. Barathiyar kavithaikal, 2006, Manivasakar pathippakam.
4. Prema Nandakumar, 2000, Irupathaam nuttrandil barathi, Barathiyar nutranduvizaha veliyedu.
5. Prema Nandakumar, 2010, Barathiyar, Inthiya ilakkiya serpikal, Barathiyar nutranduvizaha veliyedu.
6. Subbiramaniyan, S.v, 2010, Tholkaappiyam, Manivasakar pathippkam, Chennai.